# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP. No. 249/2019

| | | | |
|---|---|---|---|
| Name | : | **திருமதி. சுகந்தி** | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of September 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஊத்துமலை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊத்துமலை காவல்நிலைய குற்ற எண். 70/2006 வழக்கு சம்பந்தப்பட்ட புகார் மனு, முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், விபத்து வாகன பதிவு சான்று, பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகியவற்றின் உண்மை நகல்களை இன்று தாக்கல் செய்கிறேன். அவை **எ.ம.சா.ஆ.1 வரிசை** ஆகும். மேற்படி வழக்கில் புகார்தாரரின் பெயர் வெள்ளத்துரை ஆகும். தன்னுடைய நண்பர் செளகத் அலி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஊத்துமலையிலிருந்து வீராணம் செல்லும் வழியில் இறந்து

கிடந்தது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு, புலன்விசாரணை செய்யப்பட்டு மேல் நடவடிக்கை கைவிடப்படுவதாக வழக்கு முடித்துவைக்கப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

மேற்படி வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட காலக்கட்டத்தில் நான் அந்த காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். குற்ற இறுதி அறிக்கையில், எந்தெந்த சாட்சிகளை விசாரித்து விபத்தில் மோதிய வாகனம் பற்றிய விவரம் கண்டறிய இயலவில்லை எனகுறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இயந்திர கதியில் தவறான ஒரு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi